2022 ஜனவரி 6] [பேரவைத் தலைவர்]

மூத்த தலைவர்களில் ஒருவருமான திரு. வே. துரைமாணிக்கம் அவர்கள் 2–11–2021 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சை மாவட்டத்தில் பிறந்த திரு. வே. துரைமாணிக்கம் அவர்கள் பொதுவுடைமைச் சிந்தனைகளோடு உழவர்களுக்கான உரிமைக் குரலை எழுப்பியவர். காவேரி உரிமைப் போராட்டத்தில் பெரும்பங்காற்றியவர். அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், பொதுவுடைமைத் தோழர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

(ஈ) திரு. புனீத் ராஜ்குமார், பிரபல கன்னடத் திரைப்பட நடிகர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கன்னடத் திரைப்பட உலகின் 'பவர் ஸ்டார்' என போற்றப்படும் பிரபல கன்னடத் திரைப்பட நடிகர் திரு. புனீத் ராஜ்குமார் அவர்கள், 29–10–2021 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. மறைந்த பழம்பெரும் கன்னட நடிகர் திரு. ராஜ்குமார் அவர்களின் மகனான திரு. புனீத் ராஜ்குமார் அவர்கள் கன்னடத் திரைப்படத் துறையில் பெரும் புகழ் கொண்ட நட்சத்திரமாக விளங்கியபோதும், எளிமையான மனிதராக விளங்கியவர். ஏழையெளிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக பெரும் உதவி புரிந்தவர். அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும் கன்னடத் திரையுலகினர் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.*

(உ) பேராயர் டெஸ்மண்ட் டுட்டு, மனித உரிமைச் செயற்பாட்டாளர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தென் ஆப்பிரிக்காவில் நிறவெறிக்கு எதிராகப் போராடிய மனித உரிமைச் செயற்பாட்டாளர் பேராயர் டெஸ்மண்ட் டுட்டு அவர்கள் 26–12–2021 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. பேராயர் டெஸ்மண்ட் டுட்டு அவர்கள், உள்நாட்டுப் போரின்போது அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவித்த இலங்கை அரசிற்கு எதிராக, 2013 ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த காமன்வெல்த்*

மாநாட்டை உலகத் தலைவர்கள் புறக்கணிக்க வேண்டும் என வெளிப்படையாகத் தமிழர்களுக்கு ஆதரவாகப் பேசியவர். மனித உரிமைச் செயல்பாடுகளுக்காக அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர். அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.)

முற்பகல் 10—10

3. அறிவிப்புகள்

(அ) சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள் நேரடி ஒளிபரப்பு, முதற்கட்டமாக இன்று (6–1–2022) வினாக்கள்–விடைகள் நேரம், நேரடி ஒளிபரப்பு செய்யப்பட உள்ளமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மக்களாட்சியின் மாண்பினை நிறைவேற்றவும், பாராளுமன்ற ஜனநாயகத்தைக் கட்டிக் காக்கவும் உறுதிபூண்டுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், நூறாண்டு கடந்த சிறப்புமிக்க தமிழக சட்டமன்றப் பேரவையில், தான் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும்வண்ணம், சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளை (மேசையைத் தட்டும் ஒலி) நேரடி ஒளிபரப்பு செய்ய ஆலோசனைகளை வழங்கியதன்பேரில், இன்று, முதற்கட்டமாக, வினாக்கள்–விடைகள் நேரம் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படவுள்ளது என்கிற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இதனை ஒருமனதாக வரவேற்று, மகிழ்வீர்கள் என நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மக்களாட்சி தத்துவத்தின் மாண்பினைக் காத்திட அடித்தளமிட்ட பல்வேறு தலைவர்களின் வரிசையில் நின்று,